# கொழும்பில் திடீரென பாதுகாப்பு உஷார் நிலையில்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று திடீரென பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. நகருக்குள் வெடிகுண்டுகளுடன் வாகனங்கள் வருகின்றனவா என தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது.

நகரின் முக்கிய இடங்களிலும் மற்றும் சந்திகளிலும் பெருமளவு பொலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை பல்வேறு அலுவல்கள் நிமித்தம் கொழும்பு மாநகருக்குவந்த லட்சக்கணக்கான மக்களின் கவனத்தை

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 16 இதழ் 227
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2 — 10 — 1993


## மாவீரர் நினைவாக துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

புலோப்பளை வரலாற்றுச் சமரில் வீரச்சாவு அடைந்த போராளிகளின் நினைவாக கடந்த இரு நாட்களாக தமிழீழமெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். குடா உட்பட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் நேற்றும், நேற்று முன்தினமும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி கோட்ட மாவீரர் பணிமனையில் இந்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்த

# வடக்கில் கிளஸ்ரர் குண்டுகளை

# ராணுவம் பயன்படுத்துகிறது

## - திலகர் தகவல் -

(லண்டன்)

**சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளை அரச படையினர் வடக்கில் தற்போது மேற்கொண்டுவரும் ஒபரேஷன் யாழ்தேவி ராணுவ நடவடிக்கையின் போது பயன்படுத்தி வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பாரிஸிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.**

தற்போது வடபகுதியில் நடைபெற்று வரும் மிகப்பெரிய போர் குறித்து லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய கிளஸ்ரர் குண்டுகளை சிறிலங்கா படையினர் முன்னர் நிலவும் பயன்படுத்தியமையாலே ஏராளமான பொதுமக்கள் இம்முறை கொல்லப்பட்டனர். வெடித்துச் சிதறும் இக்குண்டுகளால் பாரிய சேதம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

திரு. திலகர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: இவ்வளவு பாரதூர

(2-ம் பக்கம் பார்க்க)

## ஒபரேஷன் யாழ். தேவி நடவடிக்கை தொடரும்

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது சிறிலங்கா பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் 'ஒபரேஷன் யாழ்தேவி' நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நான்காவது நாளாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தினர் தமக்குக் குறிக்கப்பட்ட இலக்கை அடையும்வரை இந்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 9 அதிகாரிகள் உட்பட 150 ராணுவம் பலி

(கொழும்பு)

ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையில் நேற்றுவரை ஒன்பது ராணுவ அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நூற்றிஐம்பதிற்கு அதிகமான படையினரும் பலியாகியுள்ளனர். 248 சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

### புக்காரா, ஹெலி தாக்குதல்

## சாவகச்சேரி புகைமண்டலம்

## பல ம.எண்ணெ கடைகள் எரிந்து நாசம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் நேற்று ஹெலிகொப்டர், புக்காரா விமானங்கள் நடத்திய ரொக்கட், கிபிர் தாக்குதல்களில் பத்திற்கு மேற்பட்ட மண்ணெண்ணெ கடைகள் எரிந்து சாம்பலானது நகரப் பகுதி எங்கும் சிலமணிநேரம் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

இத்தாக்குதலின்போது பல சேதமடைந்துள்ளதுடன் டிறிபேக் கல்லூரி, பதிவாளர் அலுவலகம், உட்பட பலவீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 5 சைக்கிள்களும் ஒரு காரும் எரிந்து நாசமாகின.

நேற்றுமுற்பகல் 11.35 மணியளவில் நடைபெற்ற இத்

(4ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி பகுதியில் தொடர்ந்து பதற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பகுதியெங்கும் கடந்த சில நாட்களாக ஹெலிகொப்டரிலிருந்து தொடர்ச்சியான தாக்குதல்களினால் பெரும் பதற்றம் நிலவுகிறது. 50 கலிபர், ரொக்கெட், ஷெல், கிரனேட் தாக்குதல்களே ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இரவு வேளைகளில் நடத்தப்படும் தாக்குதல்களினால் மக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி அல்லிப்பளையில் பரவலாக விமானத்தாக்கு

(யாழ்ப்பாணம்)

கிளாலி, அல்லிப்பளைப் பகுதியில் நேற்றும் பரவலாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஹெலிகொப்டர், புக்காரா, பொம்மர், சுப்பசொனிக் போன்ற குண்டு வீச்சு விமானங்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டன.

இத்தாக்குதல்களினால் ஏற்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புலோப்பளைச்சமரில் மேலும் இருவர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 29-ம் திகதி புலோப்பளையில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் மேலும் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

கப்டன் மகிழன் அல்லது விஜேகுமார் அல்லது சிவம், வவுனியா, கல்மடு, பூம்புகார்] என்பவரே வீரச்சாவு அடைந்தார்.

இச்சமரில் விழுப்புண் அடைந்திருந்த 2-ம் லெப்

(2ம் பக்கம் தொடர்ச்சி)

## ஹமில்டன் - முப்படைத் தளபதிகள் வடபகுதிக்கு அவசர விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டெரன்ஸ் பெர்னாண்டோ, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகரா ஆகியோர் நேற்று வடபகுதிக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

தற்போது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையில் படையினருக்கு ஏற்பட்ட சேதங்களையும், உயிரிழப்புக்களையும் மீளாய்வு செய்யும் விதமாகவே இவர்கள் வடக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. (இ)

## ஊரடங்கு நீடிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை 6 மணியிலிருந்து மீண்டும் 24 மணித்தியாலயங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள ஊரடங்குச்சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை குழு அறிவித்துள்ளது. (வி-க)

## யாழ்ப்பாணப் போரில் படைக்கு பலத்த இழப்பு

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்தினர் தற்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வரும் இராணுவநடவடிக்கையால் பலத்த இழப்புக்களை சந்தித்துள்ளனர் என்று இந்திய வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

இப்போரில் அவர்கள் நூற்றியிருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும் பல இராணுவ தளபாடங்களையும் இழந்துள்ளபடியால் தமது இராணுவ நடவடிக்கையை நிறுத்தியுள்ளார்கள் என்றும் இந்திய வானொலி மேலும் தெரிவித்துள்ளது. (ம-க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி- 466)


### புலோப்பளை சமரில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவேரி (இராசேந்திரம்-சூரியகலா, பண்டத்தரிப்பு) நேற்று வீரச்சாவு அடைந்தார்.

இதேவேளை மட்டு. மகிழவெட்டுவான் கொக்கட்டாப் பகுதியில் கடந்த 25 ம் திகதி செலோ மற்றும் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம் பெற்ற மோதலில் 2-ம் லெப். சுவிராஜ் (அந்தோனி தல்வயன் இளைதம்பி நவரத்தினம், செங்கலடி) என்ற போராளியும் ஜெயம் என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகள் இயக்க முழுநேர ஆதரவாளரும் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (நி)


## அறிவுக் களஞ்சியம்
--16--

சிறந்த அறிவியல் ஏடு இப்பொழுது விற்பனையாகிறது

விலை ரூபா 12/- மட்டுமே

(எ-3466)



UNIVERSITY OF JAFFNA SRI LANKA

**MASTER OF SCIENCE IN BIOTECHNOLOGY**

Applications will be entertained by me upto 1993-10-11 from suitable qualified persons who wish to register for the Degree of Master of Science in Biotechnology

Graduates and those awaiting results in Chemical, Biological, Medical Dental, Veterinary, Agricultural and Engineering Sciences will be considered. Forward applications with biodata. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondance to Registrar, University of Jaffna.

**REGISTRAR.**

UNIVERSITY OF JAFFNA.

1993-09-29.

(A-3462)


# கொடிகாமத்தில் 7000 ற்கும் மேற்பட்டோர் தென்னந்தோட்டத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று தினங்களாக தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கெற்பலி பளைப் பகுதிகளில் பிற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கிருந்த 900 அகதிகளின் குடும்பங்கள் கொடிகாமத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

கொடிகாமப் பகுதிகளிலுள்ள தென்னம் தோட்டங்களில் தற்காலிகமாக இவர்கள் குடும்பம் குடும்பமாக தங்கியுள்ளனர். கெற்பிலி பண்டிதர் குடியிருப்பிலிருந்து 813 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5000 மக்களும் பளை சமுத்திரம் குடியிருப்பு அகதிமுகாமிலிருந்து 77 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2000 பேரும் தற்பொழுது கொடிகாமம் தென்னந்தோட்டங்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள வேறு அகதி முகாம்களில் தங்குவதற்கு தயக்கம்காட்டுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கான சமயல் பாத்திரங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுவருகிறது

இதேசமயம் அச்சுவேலிப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த சுமார் 2500 மக்கள் வேறு கிராமங்களில் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். (162-இ)

## முக்கிய அறிவித்தல்

### புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் (வ.து)

### கிளைக் குழுத் தேர்தல் - 1993

இன்று (02-10-1993ம் திகதி சனிக்கிழமை) நடைபெறவிருந்த கிளைக் குழுத் தேர்தல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நா. தவநாதன்,
தேர்தல் உத்தியோகத்தர்.

(எ-3467)

## இலவம் கட்டுமரம் விற்பனைக்குண்டு

6 முழம், 7 முழம் நீளம் கொண்ட கட்டுமரங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு. கட்டுமரங்கள் பெற விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

1. கடல்வள அபிவிருத்திப்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி.
2. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கடற்புலிகள், நவிண்டில்.

(எ-3465)

யாழ். மாவட்ட மக்களுக்கு உள்ளூராட்சி இலாகாவினது

## அறிவித்தல்

### வாந்திபேதி [ கொலரா ] நோய்

1. ஆரம்ப நிலையில் இனம் கண்டால் பூரண சுகம் அடையலாம்.
2. உடனடியாக நீர் ஆகாரம் கொடுத்தல் அவசியம். வாந்தி தொடருமாகில் வைத்தியசாலையில் அனுமதிக்கவும்.
3. தன் சுத்தம் பேணினால் நோய் வராது தடுக்கலாம்.
4. கொதித்து ஆறிய நீரையே பருகுங்கள்.
5. மலசல கூடத்தை உபயோகியுங்கள். அதனைச் சுத்தமாக வைத்திருங்கள்.
6. மலகூட உபயோகித்தின் பின்பும், உணவினைக் கையாள முன்பும் சவர்க்காரம் கொண்டு கை கழுவுங்கள்.
7. உணவைப் பாதுகாப்பாக தயாரித்து உண்ணல் வேண்டும்.
8. திறந்து வைத்து விற்கப்படும் உணவை உண்ணாதீர்கள்
.9 வயிற்றோட்டம் கண்டதும் வைத்தியரை நாடுங்கள்.

இந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உங்கள் ஒத்துழைப்பு அவசியம்.

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.
(ஏ-3468 யாழ்ப்பாணம்.

### பொதுமக்களுக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்வதுதான் அரச படைகளின் நோக்கம் என்று நாங்கள் சொல்கிறீர்கள் அரசபடைகளோ புலிகளை அழிப்பதுதான் எமது நோக்கம் என்று சொல்கிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

திலகர்; அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் ஒரு இனப்பிரச்னை இல்லை என்பதும் அவர்கள் நிரந்தரமாக தமிழ்மக்களை அடிமைகொள்ள விரும்புகிறார்கள் என்பதும் அதற்குத் தடையாக இருக்கும் தமிழ் மக்களைப் பாதுகாக்கின்ற விடுதலைப்புலிகளை அழிப்பதையே அவர்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளார்கள் எனவே தமிழீழத்தின் தலை போன்ற குடாநாட்டின் கழுத்துப் பகுதியை நெரிப்பதன் மூலம் மக்களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு உட்படுத்துவதன் மூலம் பொருளாதார தடையை இறுக்குவதன் மூலம் அவர்கள் மக்களைப் பட்டினி போடவைத்து இனப்படுகொலையை சாதிக்கலாம் என்று நினைக்கிறார்கள். இந்த அடிப்படையில் அவர்கள் ஆனையிறவிலிருந்து வடக்கு நோக்கிய படையெடுப்பை கிளாலியை நோக்கி அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்

கேள்வி: கிளாலி வழியாக விடுதலைப் புலிகளுக்கு பல பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறது. அதை தடுக்க முயல்வோம் என்று அரசு சொல்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் இது நியாயமானதுதானே.

திலகர்: பொதுமக்கள் தான் கிளாலியைப் பயன்படுத்துகின்றார்கள். பொருட்களை எடுத்துச் செல்வதும், கொண்டுவருவதுமான தேவையைக் கருதி பொருளாதார தடை இறுக்கப்பட்ட நிலைமையினாலேயே பொதுமக்கள் தான் கிளாலிப் பாதையைப் பயன்படுத்துகிறார்கள்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் கிளாலிப் பாதையை ஒருமுக்கிய போக்குவரத்துபாதையாக இவர்கள் கருதவில்லை இவர்கள் பல வேறு பாதைகளை தொடர்ந்தும் பயன்படுத்தினார்கள். பயன்படுத்தி கொண்டு வருகிறார்கள். கிளாலிப்பாதையைப் மூடுவதன்மூலம் அரசாங்கம் அந்த பொதுமக்களுக்கு எதிரான ஒரு போரைத்தான் அவர்கள் இதன்மூலம் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள்.

கேள்வி: நீங்களும் இந்தத் துறையில் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். அரசும் விட்டுக்கொடுக்கமாட்டேன் என்று போரிடுகிறது. இதனால் பொதுமக்கள் துன்பம் அனுபவிக்கிறார்கள்.

திலகர்: இதில் விட்டுக்கொடுப்பது என்பது அரசைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமிக்க நினைக்கிறது அந்த நிலைமையில் தமிழ்மக்களை நிரந்தரமாக அடிமை கொள்கின்ற தமிழ் மண்ணை பறி கொடுக்கின்ற செயற்பாட்டிற்கு எதிராக தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளும் அரசுக்கு எதிராக போராட வேண்டியிருக்கிறது. மேலும் கஷ்டத்தினூடாக மிகுந்த தொல்லைகளினூடாக மிகுந்த அவலங்களின் ஊடாக நாங்கள் இதனைச் செய்ய வேண்டியிருக்கிறது. நிரந்தரமான அவலங்களை தவிர்ப்பதற்காகவும் நிரந்தர பாதுகாப்பை கொடுப்பதற்காகவும் நாங்கள் அரசாங்கத்தின் இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராட வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்

எந்த விதமான சமாதான முயற்சியையும் அரசு முன்னெடுக்கவோ அல்லது எவராலும் முன்னெடுக்கப்பட்டாலோ அதனை ஏற்றுக்கொள்ளவோ அதனடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தையோ அரசு விரும்பவில்லை அந்த அடிப்படையில் தான் தொண்டமானோடு பேசிய பொழுது சமாதான முயற்சியை தொடங்குவது குறித்த செயற்பாடுகள் குறித்து நாங்கள் கதைத்தோம். ஆனால் அரசாங்கம் இப்படியான சமாதான முயற்சிகளை ஏற்றுக்கொள்ளாது இனவாத ரீதியாக தமிழ் மக்கள் அடக்குகின்ற இராணுவ ரீதியில் தீர்வு காணுகின்ற முயற்சியில் தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என்பது தான் எங்களுடைய வரலாறாக இருக்கிறது.

வே: இலங்கை அமைச்சர் ஹமீத் லண்டன் வந்திருந்த போது எமக்களித்த செவ்வியிலே சொன்னார். நாடாளுமன்றத்தெரிவுக் குழுவினுடைய பரிந்துரையில் ஒரு சமஷ்டி அமைப்பும், தன்னாட்சி பெற்ற மாகாணங்களை இருப்பதை விரும்புகிறது என்று குறிப்பிட்டிருந்தார் அதுதானே உங்களுடைய கோரிக்கையும் அப்படியிருந்தால் இதில் போரிடுவதற்கு என்ன இருக்கிறது?

திலகர்; நாடாளுமன்றத் தெரிவுக்குழு பெரும்பான்மை இனத்தவரின் குழுவாக அரசின் இயந்திரமாக மாற்றப்பட்ட நிலையை நாங்கள் காண்கிறோம் அந்த தெரிவுக்குழுவின் நோக்கம் தமிழர் தாயகத்தை வடக்கு-கிழக்கைப் பிரிப்பதுதான் நோக்கமாக இருக்கின்றதே ஒழிய தமிழ்மக்களுக்கு எந்தவித தீர்வையும் கொடுக்கின்ற நோக்கமாக இல்லை அதனால்தான் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கின்ற ஒரு இடைக்கால அறிக்கையை அதுமிக விரைவில் சமர்ப்பிக்கவுள்ளது.

கேள்வி: சமஷ்டி அமைப்பு, மாகாணங்களுக்கு தன்னாட்சி என்று அந்த பரிந்துரை இருக்கிறது என்று சொன்னீர்கள். அதைப் பொறுத்தவரை தங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையல்லவா?

திலகர்; சமஷ்டி ஆட்சி என்பதோ அல்லது இந்திய முறை போன்ற வடிவம் என்பதோ அரசாங்கத்தின் போலித்தனமான ஒரு முகமூடியாக அல்லது போலித்தனமான செயற்பாடாக இருக்கின்றதே ஒழிய அது உண்மையாக ஒரு பிரச்சனைத் தீர்க்கின்ற ஒரு தீர்வுத்திட்டத்தை வைக்கின்ற நோக்கமோ அல்லது பிரச்சனையை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கின்ற நோக்கமோ இல்லாமல் வடக்கு கிழக்கு தாயகத்தை பிரித்து எவ்வாறு தமிழ் மக்களை நிரந்தரமாக அடிமை கொள்கின்ற நோக்கப் பொருளாக இருக்கின்றது அதனுடைய ஒரு அங்கமாக அதனுடைய கருவியாகத்தான் இந்த தெரிவுக்குழு செயற்பட்டுவருகிறது.

கேள்வி: அந்த தெரிவுக்குழுவினுடைய பரிந்துரைகளை தாங்கள் இன்னமும் வெளிவராத நிலையிலே புறக்கணித்து விட்டீர்கள் என்று சொல்லலாமா?

திலகர்: தெரிவுக்குழுவையே நாங்கள் ஆரம்பத்திலிருந்தே புறக்கணித்துவிட்டோம் தெரிவுக்குழு சொல்லுகின்ற திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இல்லை.-(நி)

மணிவாக்கு

சந்தேகத்தின் புரையோடிய புண்களை வாதங்களோ, விளக்கங்களோ குணப்படுத்த முடியாது
- மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## எதற்காக இந்தப் பழி!

சில கிலோ மீட்டர் தூரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பல உயிர்களைப் பலியெடுத்திருக்கிறது அரசு!

"தனது சொந்த நிலத்தை மீட்பதற்காகவா அரசு இப்படிப் பலிகொடுத்து, பலியெடுத்துப் போர் புரிகிறது?"- விவரம் புரியாத வெளிநாட்டவர் இப்படிக் கேட்கக் கூடும்!

ஓரின மக்களைக் கொண்ட படையினர், இன்னோர் இன மக்களின் மண்ணிலே நடாத்தும் ஆக்கிரமிப்புப் போர் என்ற விளக்கம் பெற்றதும், இந்த அரசுமீது நீங்காத பழி சுமத்தப்படும் என்பதை அரசு உணரவில்லைப் போலும்!

ஒரு மொழி நாடாகச் சிறீலங்கா இருக்கவேண்டுமென்பதற்காக இனத்துவேஷம் வளர்த்து, இருபத்துநான்கு மணி நேரத்தில் சிங்களச் சட்டம் நிறைவேற்றியும் குறிக்கோளை அடைய முடிந்ததா?

எதிர்ப்புக்குரல் கொடுத்தோரை, பல வகையாலும் இம்சித்து, கலவரம் கிளப்பி அலைக்கழித்து, கப்பல்மூலம் அனுப்பி வைத்தும், வெற்றிக்களிப்பில் மிதக்க முடிந்ததா?

இனப்படுகொலை முயற்சிகள் முன்னிற்கிறார்கள், பௌத்த தர்மத்தை மறந்துவிட்டார்கள் என்ற சொல்தான் மிஞ்சியது!

அதன்பின்னாவது பிரச்சனைகளைத் தீர்த்திட, அமைதியை நிலைநாட்டிட சரியான, நீதியான வழியை அரசு நாடியதா?

1977ல் ஐ. தே. கட்சி தனது தேர்தல் கொள்கை அறிக்கையில் தமிழர்கள் குறைகள் இவையெனச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டி, தமிழர்கள் வாக்குகளையும் பெற்று ஆட்சி பீடமேறியது.

தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து என்ற சட்டமியற்றிப் பழி துடைக்க முயன்றது.

ஆனால், பழைய படி வேதாளம் முருக்க மரம் ஏறியது போல, இனத்துவேஷமும், இனஒதுக்கல் கொள்கைகளுமே தலை தூக்கின!

மனிதவுரிமை மீறலில் சர்வதேச மட்டத்தில் முதலிடம் வகிக்க வேண்டுமென்ற துடிப்பில் சிறீலங்கா அரசு செயற்படுகின்றது என்ற பழிச் சொல்லே கிடைத்தது.

பழி துடைத்திடப் பலியெடுப்பு முயற்சிகளைக் கைவிட அரசு முன்வர வேண்டும்!

**குளம் இன்றி வளம் இல்லை**

# சிங்கள அரசு விரைவில் தமிழ்ப் படையிடம் தோற்கும்

## அஞ்சலிக் கூட்டத்தில் பரா

(உடுவில்)

"ஹிட்லர் அடைந்த தோல்வியைப்போல, வியட்நாம் அடைந்த தோல்விபோல சிங்கள அரசும் விரைவில் தமிழர் படையிடம் தோல்வி காணப் போகின்றது. தனது இறுதிப் பலத்தைப் பிரயோகித்து அரசு போராடுகின்றது. அது தோல்வியில் முடிவது உறுதி"

இயக்கச்சி பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்த வீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா இவ்வாறு கூறினார்.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பரா மேலும் கூறியதாவது: பொருளாதாரத் தடைகளை விதித்து தமிழர் போராட்டத்தை நசுக்கலாம் எனவும் கிளாலி பாதையை மூடினால் போராட்டம் முடிந்துவிடும் எனவும் அரசு எண்ணுகிறது. நாம் நீதியின் வழிப் படையில் தருமத்துக்காக போராடுகிறோம். எமது இதயம் போல விளங்கும் கிளாலி பாதையை தடுத்து பொருளாதார சமூகரீதியில் தமிழர்களை ஒதுக்கி, அழித்துவிட அரசு முனைகின்றது. அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்க முனைகிறது. தனது முழுசக்தியையும் பயன்படுத்தி நடத்தும் இராணுவ தாக்குதல் மத்தியிலும் எமது வீரர்கள் மனோபலத்துடன் எதிர்த்து நின்று போராடுகின்றனர். எமது வீரர்களுடன் இளைஞர்களும் யுவதிகளும் போராட்டத்தில் இணையவேண்டும் என்றார். 109-இ

# எதிர்பார்த்த போர் வெடித்துவிட்டது

(உடுவில்) — இளம்பரிதி

நாம் எதிர்பார்த்த போர் வெடித்துவிட்டது. கிளாலியில் இருந்து போர் ஆரம்பமானதும் மக்கள் குழப்பமடைகிறார்கள். ஏன் குழம்பவேண்டும்? ஒவ்வொரு போர் முனைகளிலும் இருந்து எதிரி முன்னேற முயல்வதை முறியடிப்பதில் நமது வீரர்கள் முனைப்பாக உள்ளனர்.

இவ்வாறு யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி புலோப்பளையில் வீரச்சாவடைந்த மாவீரர் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில்,

யாழ்ப்பாணக் குடாநாட்டைத் துண்டிப்பது-போராட்டத்தை முறியடிப்பது-இதுவே இன்றைய படையெடுப்பின் நோக்கம். ஒவ்வொரு போர் முனையிலும் எதிரியை எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம். இயக்கச்சிப் போரில் எதிரியின் ஆளணி படையுடன் எமது படையை ஒப்பிடும்போது எம்மிடம் மிகக்குறைந்த தொகையினரே உள்ளனர். இந்த படையினரும் மனோபலத்துடன் போராடி 4 டாங்கிகளை தகர்த்துள்ளனர். எமது மேலதிக படை அங்கு விரைந்ததும் எதிரிகள் முன்னேற முடியவில்லை. எதிர்பாராத விதத்தில் எம்மில் ஐம்பதுபேர் இறந்தும் பலர் காயமடைந்தும்விட்டனர். எதிரியிடம்பல ஆயுதம் உண்டு. எமது மனோபலம் கொடுக்க அடிமூலம் எதிரியின் ஆயுதங்கள் பலவற்றை நாம் கைப்பற்றியுள்ளோம்.

எதிரியை ஒடுக்குவதில் முனைப்புடன் செயற்படும் எமது வீரருக்கு பக்கபலமாக நீங்கள் இருக்கவேண்டும்.

(109-இ

## ஒய்வூதிய காசோலைகள்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் செப்டம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலகத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (71)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைச் சுகாதாரப் பகுதியினரால், நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வழங்கியுள்ள உதவியுடன் யாழ். நகர்ப்புறப் பகுதிகளில் மலசலகூடங்கள் அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கட்டமாக, இத்திட்டம் குருநகர், நாவாந்துறைப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரம் தெரிவித்தார். 162

## புதிய அதிபர்

(சுன்னாகம்)

மட்டுவில் கொத்தணி அதிபராகவும், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபராகவும் திரு மு. சுப்பிரமணியம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவ்வித்தியாலய அதிபராக இருந்த திரு. அ. பொ. செல்லையா, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். -165

## இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில், இன்று சனிக்கிழமை காலை 8-00 மணி முதல் நவக்கிரக மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும், விசேட ஹோமமும் நடைபெறவுள்ளன -71

0 0 0

(உடுவில்)

இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில், ஜகத்குரு ஆசாரிய சுவாமிகளின் திவ்ய கடாட்சானுக்கிரகத்தை யிட்டு இன்று சனிக்கிழமை விசேட பூசைகள், காயத்திரி ஜபஹோமம் ஆகியன நடைபெறவுள்ளன

நாளை ஞாயிற்றுக்கிழமை, ஜப, ஹோம, தர்ப்பணம் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனின் சிறப்புச் சொற்பொழிவு ஆகியன நடைபெறும். -109

## இராசிபலன்

02-10-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 16)

துதியை பின்இரவு 4-45 வரை ரேவதி மு. பா 9-42 வரை, கரிநாள் மரணயோகம், இராகுகாலம் 9-02 முதல் 10-32 வரை, சுபநேரம் மாலை 3 02 முதல் 4-32 வரை

மேஷம்: மகிழ்ச்சியான சம்பவம், தாயார் நல்லுறவு. தொழில் சிறப்பு

இடபம்: கண்டுபிடிப்பு, புத்தி தடுமாற்றம், குடும்ப வெறுப்பு.

மிதுனம்: வாய்த் தர்க்கம், தொழில் லாபம், புதிய முயற்சி.

கடகம்: பெரியோர் ஆசி, இனிய சந்திப்பு, கடன்வசூல்.

சிம்மம்; கூடாநட்பு, வயோதியர் துன்பம், அதிக யோசனை.

கன்னி: கற்பனை மிகுதி, குடும்ப பிரச்னை, பணக் கஷ்டம்.

துலாம்: புதிய வசதிகள் புத்திரர் பெருமை, காரிய சித்தி

விருச்சிகம்: தொழில் லாபம் நண்பர் சகவாசம், மன மகிழ்ச்சி.

தனுசு: வீண் பயம், தொழில் கவலை, அன்னியர் தலையீடு.

மகரம்: எதிரிகள் தொல்லை, வாக்குவாதம், தவறான போக்கு.

கும்பம்: வாக்குவன்மை, தெய்வீக செலவு, குழந்தைப் பாசம்.

மீனம்: ஏமாற்றம். வேலைக் கஷ்டம் மன சஞ்சலம்.

— ஜோஸ்யர்.

# ஜே. வி. பி. சந்தேக நபர்கள் 22 ஆயிரம் பேர் விடுதலை

## 800 தமிழ் கைதிகள் மீது விசாரணை

(கொழும்பு)

ஜே. வி. பி. சந்தேக நபர் 22 ஆயிரம்பேர் இதுவரை விடுதலையாகியுள்ளனர் இதேவேளை தடுப்புக் காவலிலுள்ள 800 தமிழ் கைதிகள் மீதான விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

வன்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட ஜே. வி. பி. சந்தேக நபர்கள் 22,444 பேரில் இதுவரை 22,000 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மிகமோசமான வன்முறைகளில் ஈடுபட்டதாக சாட்சியங்கள் உள்ள பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், எழுதுவினைஞர்கள், ஆசிரியர்கள் உட்பட பலதரப்பட்ட சுமார் 300 பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டோர் மீது மிக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 849 தமிழ்க் கைதிகள் மீதும் பாதுகாப்பு அமைச்சு தற்போது விசாரணைகளை நடத்திவருவதாகவும் செய்திக் குறிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது. -71-இ

# ரஷ்யாவில் பிரச்னை தணியும் நிலையில்?

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தணியும் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பதவிநீக்கப்பட்ட அதிபர் பொறிஸ் யெல்ட்சினும், புதிய அதிபராக நியமிக்கப்பட்ட ரூஷ்கோயும் பேச்சுவார்த்தைகள் நடாத்த இணங்கியுள்ளதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ரஷ்யாவில் ஏற்பட இருந்த இரத்தக்களரி ஒருமுடிவுக்கு கொண்டுவரப்படலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-இ)

# அ.இ.மு.க., தி.மு.க. வுடன் காங்கிரஸ் கூட்டில்லை

(சென்னை)

அ. தி. மு. க.வுடனோ, தி. மு. க.வுடனோ இந்திரா காங்கிரஸ் எந்தக் காலத்திலும் எவ்விதத் தேர்தல் உடன்பாட்டையும் வைத்துக்கொள்ளாதென தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பழநி, ராணிப்பேட்டைத் தொகுதிகளில் நடந்த இடைத் தேர்தலின் போது தனித்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் படுதோல்வி கண்டது.

இத்தோல்விகள் எதிர்பாராததும், தற்காலிகமானதுமாகும். எனினும் இதற்காக இனிமேல் திராவிடக் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளப் போவதில்லை எனத் திரு. ராமமூர்த்தி கூறினார். -கே-சி

## பெப். 30ல் பிறந்தவர் தமது பிறந்த தினத்தைக் கொண்டாட முடியாது

(லண்டன்)

பெப்ரவரி 29ல் பிறந்த ஒருவர் தனது பிறந்த நாளை, நான்கு வருடத்திற்கு ஒரு முறை வரும் லீப் வருடத்திலே தான் கொண்டாட முடியும் ஆனால் 2000மாம் ஆண்டில் வரும் பெப்ரவரி மாதம், 30ம் திகதியில் முடிவதால் அன்று பிறந்தவர் தனது பிறந்த நாளை கொண்டாடவே முடியாது

காரணம் ஆயிரம் வருடத்திற்கு ஒரு தடவை மாத்திரம் பெப்ரவரி மாதம் 30ல் முடிவடையும். 2000-ம் ஆண்டிலும் அந்த நிகழ்வு (30-2-2000)தில் ஏற்படுகிறது. (கே-இ)

## இந்திய நிலநடுக்கம்:
# பலியானோர் எண்ணிக்கை 30 ஆயிரத்தையும் தாண்டலாம்

(புதுடில்லி)

மஹாராஷ்டிர மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை தாண்டக்கூடுமென செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக எட்டு இராணுவ அணிகள் மஹாராஷ்டிரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இராணுவ, கடற்படை, விமானப்படைகளின் வைத்திய அணிகள் நூற்றுக்கணக்கான தற்காலிக வைத்திய கூடங்களை ஆங்காங்கே நிறுவியுள்ளன.

மஹாராஷ்ர மாநிலத்திலுள்ள இலாத், ஓமார், லாட்டோ பகுதிகளே இந்த நிலநடுக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த இடங்களில் மட்டும் 22 ஆயிரத்துக்கு மேல் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளது இங்கு ஆயிரக்கணக்கான இறுவர்கள் அநாதைகளாகி விட்டதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி இடங்களில் இடிபாடுகளிடையே இருந்து மீட்கப்படும் சடலங்களை ஆங்காங்கே வைத்து எரிப்பதினால் இப்பகுதிகள் எங்கும் ஒரே புகைமண்டலமாக காட்சியளிக்கின்றது. நில நடுக்கத்தினால் சீர்குலைந்து போன மின் சாரம், தொலைத் தொடர்பு சாதனங்களை இராணுவத்தினரால் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிவாரண உதவிகளை வழங்குவதற்காக அவுஸ்திரேலியா, ஜப்பான், பாகிஸ்தான், பிரான்ஸ், பிரிட்டன், பிரேசில், அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன.

இந்த துயரச் சம்பவத்துக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இந்திய அரசு தனது நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருவாரத்து ஒத்திவைத்துள்ளது.

—வி-இ-வி

# மட்டு. படை முகாம்களுக்கு ஹமில்டன், சிசில் விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரை உற்சாக மூட்டும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனிகசூரிய ராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன மட்டக்களப்பிற்கு சென்று திரும்பியுள்ளனர்.

மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த இவர்கள் படை உயர் அதிகாரிகளையும் படையினரையும் சந்தித்துள்ளனர்.

கிழக்கு மாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, பிரிகேடியர் ஜான் பெரேரா ஆகியோரை இவர்கள் சந்தித்ததுடன் படை முகாம்களுக்கு நேரில் சென்று படையினரை உற்சாகமூட்டினர்.

—தி

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த சுகாதார வார நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாட்டு நிலைமை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளதென வலி வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# தமிழ்கட்சி சுதந்திரக்கட்சி விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதில் தயாராக இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அண்மையில் வெளியிட்டுள்ள கட்சிக் கொள்கை அறிக்கையில் தமிழர் பிரச்சினை விடயத்தில் அது தீவிர அக்கறை கொண்டுள்ளதை எடுத்துக் காட்டுகிறது என தமிழ் அரசியல்கட்சிகள் கருதுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து கடந்த வாரம் தமிழ் அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் திருமதி பண்டாரநாயக்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

—இ-வி

## ஒபரேஷன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாம்.

விடுதலைப்புலிகளின் எந்தத் தாக்குதல்களுக்கு மத்தியில் படையினர் இந்தநடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர். விமானப்படையினரின் போர் விமானங்களின் பாதுகாப்புடன் ராணுவம் புலிகளுடனான சமரில் ஈடுபட்டுள்ளது.

# படையினர் கைப்பற்றும் இடங்கள் பாதுகாக்கப்படுமா?

(கொழும்பு)

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின்மூலம் இராணுவம் கைப்பற்றும் இடங்களை இராணுவத்தினர் தொடர்ந்து பாதுகாத்து வருவார்களா? என்பது சந்தேகத்துக்குரிய ஒரு விடயமே" இவ்வாறு பல இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடபகுதியில் மழை காலம் ஆரம்பமாகி உள்ளது. இந்த நேரத்தில் யாழ்தேவி நடவடிக்கை பலனைத் தருமா என்பது கேள்விக்குறியே.

வடபகுதியில் இராணுவம் முன்னர் பிடித்த இடங்களைக் கூட தக்கவைத்திருப்பதுமிகக் கடினமாகவே இருக்கிறது. இதுதான் கடந்த கால வரலாறு.

தாக்குதல் வேளைகளில் புலிப்படையினரில் எவ்வளவு பேரைக் கொல்லமுடியுமோ அவ்வளவு பேரைக் கொன்றுவிட்டு உடனடியாக முகாம்களுக்குப் பாதுகாப்பாக திரும்புவதையே இராணுவத்தினர் விரும்புகின்றார்களேயொழிய பிடித்த இடங்களைத் தக்க வைக்கவேண்டும் என்ற நோக்கம் இராணுவத்தின் மத்தியில் இல்லை என்று மேலும் தெரிவித்துள்ளனர். (வ)

## புக்காரா, ஹெலி தாக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலின்போது மீசாலை கடைச் சேர்ந்த வடிவேலு ரவிக்குமார், சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு சிவராசா, மந்துவிலைச்சேர்ந்த பெண்ணையா செல்லம் ஆகியோரின் மண்ணெண்ணைக் கடைகள் உட்பட பல எண்ணெய்க்கடைகள் எரிந்து நாசமாகின. பதினைந்துக்கும் மேற்பட்ட மண்ணெண்ணை பரல்கள் வெடித்துச் சிதறியதில் சாவகச்சேரிநகர் ஒரேபுகை மண்டலமாக தென்பட்டது.

தபால் நிலையவீதியில் ரொக்கட் தாக்குதலினால் திருமலையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள கிருஷ்ணன் பிரபாகரன் என்பவரின் கைக்கிளைக்கடை முற்று எரிந்து நாசமாகியது ஹெலிகொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர் தாக்குதலுக்கு தபால் நிலையத்தில் கடமைபுரியும் நடராஜா ஜெயக்குமார் 24 வயது பிருகன் (2 வயது) ஆகியோர் உட்பட எஸ். தோமஸ் (38 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

மேலும் புக்காரா, ஹெலி தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்புதேடி ஓடியதில் பலர் சிறுசிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் அரச,தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

புக்காராவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரொக்கட்டுகள் மண்ணெண்ணைப் பரல்கள் மீது விழுந்து வெடித்ததினால் மண்ணெண்ணையுடன் இருந்த 15க்கும் மேற்பட்ட பரல்கள் வெடித்துச் சிதறியதில் சாவகச்சேரி நகர் ஒரே புகைமண்டலமாகத் தென்பட்டுக் கொண்டிருந்ததனால் சாவகச்சேரிப் பகுதியிலுள்ளோர் மரண ஓலத்தை எழுப்பினர். 1987-ம் ஆண்டு ஐப்பசி மாதப் பகுதியில் இந்திய இராணுவ புளுதண்டர் ஹெலி நடத்திய தாக்குதலை பார்த்தவர்கள் தங்கள் உறவினரை, பிள்ளைகளை, கணவன்மாரை இழந்தவர்கள் இந்தப் புகை மண்டலத்தைப் பார்த்தும் தங்களுக்குரியவர்களுக்குரிய உயிர்களுக்கு ஏதாவது நடைபெற்றுவிட்டதோ என நினைத்தனர். இமானப் படையினரின் இந்த வெறித் தாக்குதலை எதிர்த்து விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து புக்காரா விமானங்களும் ஹெலிகொப்டரும் அவ்விடத்தைவிட்டு மேல் எழுந்து சென்றன.

[155-158- 157-சு- வி]

## தென்மராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பெரும் பீதியுடன் தமது இரவுப் பொழுதினைக் கழித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பலாலியிலிருந்து ஆனையிறவு நோக்கிச் சென்ற ஹெலிகொப்டர் நுணாவில், மட்டுவில் பகுதிகளில் நடத்திய கிரனைட், ரொக்கெட் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை 5-30 மணியளவில் சாவகச்சேரி கண்டி வீதியில் ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். பல கடைகள் சேதமடைந்துள்ளன.

சோமசுந்தரம் ஜெயக்குமார் (18 வயது) சாவகச்சேரி என்பவரே தாக்குதலில் காயமடைந்தவராவார்.

தென்மராட்சிப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இத்தகைய தாக்குதல்களினால் பெரும் பதற்றம் நிலவுகிறது —155-157-சு-வி

# கொலராவினால் நேற்று இருவர் பலியானார்கள்

(யாழ்ப்பாணம்)

கொலரா நோய்க்கு உட்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் நேற்று மரணமானார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செ. மகேந்திரன் (29 வயது குப்பிளான்தெற்கு, க.மாணிக்கம் (வயது 60, கைதடி நுணாவில் (ரயர் கொம்பனிமுகாம் ஆகிய இருவருமே நேற்று மரணமானவர்களாவர்.

நேற்றுமுன்தினம் மு. நாகரத்தினம் (வயது 54, அரசலி வடக்கு) என்பவரும் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது இதுவரை கொலரா நோயாளிகள் 8 பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (157 வி)

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஈர்க்கத்தவறவில்லை.

கொழும்பு மாநகரில் எந்த வேளையிலும் மிகப்பெரிதொரு அனர்த்தம்ஒன்று ஏற்படலாம் என்பதையே இது எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (இ வி)

# ஹெலியின் தாக்குதலில் நீர்வேலியில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சந்திப் பகுதியில் நேற்று ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதல் மேற்கொண்டது. இத்தாக்குதலின் போது அப்பகுதியிலுள்ள கராஜ் ஒன்றினுள்நின்ற இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மு.ப. 11 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தவர்களான பி. நவரட்ணம் (47 வயது, புத்தூர்), உ. பாலச்சந்திரன் (38 வயது,நீர்வேலி ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் நேற்று மாலையும் இப்பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

—158-வி

## கிளாலி அல்லிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சேத விபரங்கள் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லையாயினும் அப்பகுதியில் பெருமளவு பனை தரும் மரங்கள் முறிந்துள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை எழுதுமட்டுவாள் பகுதியில் சுப்பசொனிக் விமானத்திலிருந்து நடத்தப்பட்ட 50 கலிபர் தாக்குதலினால் உசன் மிருசுவிலைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். இத்தாக்குதல் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

—வி

## மாவீரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வளையங்களும் வைக்கப்பட்டுள்ளன. பெருந்திரளான மக்கள் மாவீரர் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நெல்லியடி பஸ் நிலையத்தில் முன்னாள் வடமராட்சி தளபதியும், தற்போதைய கனரக ஆயுதப் பொறுப்பாளருமான மேஜர் பிரேம்நாத் உட்பட19 வீரவேங்கைகளது வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. பெருமளவு மக்கள் கொட்டும் மழையிலும் இம்மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்

கிளிநொச்சிக்கோட்டத்தில் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட விசேட அலங்கார மண்டபத்தில் புனோப்பளையில் வீரச்சாவு அடைந்தவர்களுக்கு பெருமளவு மக்களும், போராளிகளும் ஈகைச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.

(சு-168-வி)

# ராணுவ தாக்குதல் குறித்து யு. என். எச். ஸி. ஆருக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ தாக்குதலினால் உயிரிழந்த படுகாயமடைந்த பொதுமக்களின் விபரங்கள் மற்றும் இதனால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதிகளாக வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்திருப்போர் சம்பந்தமான விபரங்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய கொழும்புச் செயலகத்துக்கு அறிவித்துள்ளதாக ஐ. நா. உ. ஸ்தானிகராலய யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இந்தியாவிலிருந்து அண்மையில் இலங்கை திரும்பிய அகதிகளைச் சேர்ந்த ஐம்பது குடும்பங்கள் கிளிநொச்சியிலும் ஐம்பது குடும்பங்கள் முல்லைத்தீவிலும் குடி அமர்த்தப்பட்டு நிவாரண வசதிகளும் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். 162-வி

## 9 அதிகாரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கையில் படையினருக்கு ஏற்படும் அழிவுகளும், உயிர்ச் சேதங்களும் மேலும் அதிகரிக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

நாற்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் இதுவரை இந்நடவடிக்கை காரணமாக பலியாகியுள்ளனர். பொதுமக்கள் தரப்பில் ஏற்படும் உயிர்ச் சேதங்களும் மேலும் அதிகமாகலாம் என அந்தவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

—இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/Bt